தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**9 வயதுப்பிரிவு**
(01.01.2013 – 31.12.2013 வரையில் பிறந்தோர்)

## தியாக தீபம் திலீபன் மாமா

“மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திர தமிழீழம் மலரட்டும்” என்ற உரிமை முழக்கத்தோடு அறப்போர் தொடுத்தவர் திலீபன் மாமா. மருத்துவத்துறையில் கற்றுக்கொண்டிருந்த இவரை, சிங்கள அரசின் இன ஒடுக்குமுறை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணையச் செய்தது. களம் பல கண்ட இளம் புலியாகவும் தமிழீழ மக்களை விடுதலைப் பாதையில் வழிநடத்திய அரசியல் போராளியாகவும் இவரை இனங்காட்டியது தலைவர் மாமாவின் வழிகாட்டல்.

அமைதிப்படை என்ற பெயரிலே எம் தமிழீழ மண்ணில் கால்பதித்தன இந்திய அரச படைகள். அவர்கள் தமிழினத்துக்குச் செய்த அநீதியை எதிர்க்கத் துணிந்தார் திலீபன் மாமா. இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரண்டு நாள்கள் நீர் கூட அருந்தாமல் நல்லூரின் வீதியிலே உண்ணா நோன்பு இருந்தார்.

எம் இனத்தின் நியாயமான அடிப்படை வேண்டுகோளைக் கூட ஏற்க மறுத்தது இந்திய அரசு. திலீபன் மாமாவின் உறுதியான அறப்போர் உலகிற்கு மாபெரும் செய்தியைச் சொல்லி நிற்க, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து ஏழு செப்ரெம்பர் இருபத்தாறாம் நாள் அவரது இன்னுயிர் பிரிந்தது. திலீபன் மாமா அறப்போருக்கு எடுத்துக்காட்டாகி, உலகில் இதுவரை யாரும் செய்திராத தியாகத்தைச் செய்து முப்பத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன.

உருகி, உயிர் ஈந்த திலீபன் மாமாவினதும் அவரைப் போன்று மண்ணுக்காக விதையாகிய மாவீரர்களினதும் கனவு நனவாவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று இன்றே சிந்திப்போம். தமிழீழ விடுதலைப் போராட்டம் அறம் தழுவியது என்பதை உலகுக்கு எடுத்துக் கூறுவோம். எங்கள் தாயகமாம் தமிழீழத்தை மீட்க உறுதியோடு போராடுவோம்.

நன்றி,

வணக்கம்.